வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு. A. கந்தகுமார்., எம்.எல்.,

மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ), மயிலாடுதுறை,

அமர்வு வழக்கு எண் 52/2023

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 4 | நாள் | 18.07.2023 |
| பெயர் | சந்திரசேகரன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் கடந்த 2022 ல் உதவி ஆய்வாளராக தனிபிரிவு குற்றப்பிரிவில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2003 ல் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 13.03.2003 விடுதலை சிறுத்தை கட்சி பேரணி பொதுக்கூட்டம் நடந்தது. அப்போது பந்தோபஸ்துக்கா நானும் காவலர்252,1023,1309,407 மற்றும் மயிலாடுதுறை ஆய்வாளர் மோகனவேல் பாலையூர் காவல் ஆய்வாளர் எல்லோரும் காவேரி நகர் மேம்பாலம் கீழ் நின்றோம். ஊர்வலம் அன்று மாலை 19 மணிக்கு புறப்பட்டு வந்தது. விடுதலை கட்சி தொல்திருமாவளவன் மாவட்ட செயலர்,இழவளவன், அவர்களுடன் சுமார் 4 ஆயிரம் பேர் ஊர்வலமாக வந்தார்கள். 19.30 மணிக்கு செம்மங்குளம் பெட்ரோல் பங்க் அருகில் வந்துகொண்டிருந்தது. ஊர்வலத்தை எண்2 சாலை வழியாக செல்லவேண்டும் என்று கூறினார்கள். அதற்கு ஆய்வாளர் அந்த வழியாக செல்ல அனுமதி இல்லை என்ற கூறினார். உடனே ஊர்வலத்தில் வந்தவர்கள் வருது வருது புலிபடை வருது போலிஸ் நாய்கள் ஒழிக இந்த படை போதுமா இன்ன கொஞ்சம் வேணுமா என்று கூறி தகராறு செய்தார்கள். அப்போது நானும் மற்றவர்களும் தடுத்தோம். அதற்கு எங்களை கல்லாலும் கட்டையாலும் அடித்தார்கள். எனக்கு இடுப்புக்கு கீழ் அடிப்பட்டது. அடித்தவர்கள் ஆஜர் எதிரிகள்தான். மேலும் 2 பேருந்துகளை அடித்து நொருக்கினார்கள். அடிப்பட்டதில் எனக்கு மயக்கம் வந்தது என்னை

மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு நான் வெளிநோயாரியகாக சிகிச்சையில் இருந்தேன். பின்பு சிகிச்சை முடிந்து காவல் நிலையம் திரும்பினேன்.

எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை

13.03.2003 நான் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் ஊர்வலபணியில் இருந்தேன் என்பதற்கு காவல் நிலைய பொதுநாள் குறிப்பில் குறிப்பு உள்ளாதா என்றால் உள்ளது. என் காவல் துறை கையேட்டில் குறிப்பு உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. 13.03.2003 நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல் மேகனவேல் அவர்கள் தலைமையில் ஊர்வல பாதுகாப்பு பணியில் இல்லை என்று வழக்கிற்காக இந்த விவரங்களை பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் அனுமதியானபோது என்னை தெரிந்த மற்றும் தெரியாக நபர்கள் என்னை தாக்கினார்கள் என்று வாக்குமூலம் அளித்தேன். போலிசார் என்னை விசாரித்தபோது ஆஜர் எதிரிகள் என்னை தாக்கியதாக கூறியிருந்தேன். வழக்கிற்காக முதல் முறையாக ஆஜர் எதிரிகள் என்னை தாக்கியதாக அடையாளப்படுத்தி போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவலர் உயர் அதிகாரிகள் என்னை கேட்டுக்கொண்டதற்க இணங்க இடது சுத்தாமட்டையில் வலி உள்ளது போல நடித்து மருத்துவமனையில் அனுமதியானேன் என்று சொன்னால் சரியல்ல. ஊர்வலத்தில் போலிசார் ஒழிக என கோஷம் போடவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன வாகனங்களை உடைத்து சேதப்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. விவரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என் காவல் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.